# நற்செய்தி

Transcribed from a message spoken in February 2015, in Chennai

By *R.S.Milton*

## மனிதன் தேவனுடைய மிக உயர்ந்த படைப்பு

மனித வாழ்க்கை மிக உயர்ந்தது. மனிதனே தேவனுடைய படைப்பிலே மிகத் தலைசிறந்த படைப்பு. ஏனென்றால், வேறு எந்தப் படைப்பையும் அவர் "தேவனுடைய சாயலிலே படைத்தார்" என்று வேதாகமம் சொல்லவில்லை. மனிதனைப்பற்றி மட்டுமே "தேவன் மனிதனைத் தமது சாயலாகவும், தமது ரூபத்தின் படியேயும் படைத்தார்" என்று ஆதியாகமம் *1:26* சொல்லுகிறது "God created man in His image and according to His likeness". ஆகவே, மனிதன் தேவனுடைய பார்வையிலே மிகவும் அருமையானவன்.

## மனிதனோடு அன்பின் உறவு

தனக்கு ஒரு பாவி வேண்டும் என்பதற்காகவோ அல்லது நரகத்திற்குக் கொஞ்சம் விறகு வேண்டும் என் பதற்காகவோ அல்லது "படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக, மனுவைப் படைத்தான் தன்னை வணங்க" என்று தன்னைத் தொழுதுகொள்வதற்கு ஒரு கூட்டம் உயிரிகள் வேண்டும் என்பதற்காகவோ தேவன் மனிதனைப் படைக்கவில்லை. மனிதனை அச்சுறுத்தி, "என்னை நீ தொழுதுகொள்ளாவிட்டால், என்னை நீ ஆராதிக்காவிட்டால், நான் உன்னை நரகத்திற்கு அனுப்பிவிடுவேன். அதனால் மரியாதையாக நீ என்னைத் தொழுதுகொள்," என்பதற்காகத் தேவன் மனிதனை உண்டாக்கவில்லை. தேவன் மனிதனோடு விரும்புகிற உறவு, அன்பின் உறவு. அன்பின் அடிப்படையிலன்றி வேறு எந்த அடிப்படையிலும் அவர் மனிதனோடு உறவுகொள்ள விரும்பவில்லை. முழு வேதாகமும் அதற்கு சாட்சிபகர்கின்றது.

தேவனைக்குறித்து பேசுகின்ற அல்லது "தேவன் இப்படிப்பட்டவர்" என்று மனிதர்களுக்குச் சொல்கின்ற தேவனுடைய மக்களாகிய நாம் தேவனை எப்படிப் பிரதிநிதித்துவப்படுத்துகிறோம் என்பதைக்குறித்து மிக வும் கவனமாக இருக்க வேண்டும். "தேவன் இன்னார்" அல்லது "தேவன் எப்படிப்பட்டவர்" என்பதற்கு முழு வேதாகமமும் சாட்சிபகர்கின்றது. ஒரு எறும்பு என்னதான் முயற்சி செய்தாலும் ஒரு மனிதனுடைய மனம் எப்படிப்பட்டது என்று புரிந்துகொள்ள முடியுமா? ஒரு எறும்பு ஒருவனுடைய காலில் ஏறத் தொடங்கி ஐந்து நிமிடம் கழித்து அவனுடைய தலைக்கு வந்துவிடும். அதன்பிறகு, "மனிதன் அப்படி பெரியவன் ஒன்றும் இல்லை. ஐந்து நிமிடத்தில் அவனுடைய காலில் தொடங்கி தலைக்குப் போய்விடலாம்," என்று நினைக்கலாம். அதனால் மனிதனுடைய இருதயத்திலே எப்படிப்பட்ட எண்ணங்களும், விருப்பங்களும், தீர்மானங்களும் இருக்கின்றன என்பதைத் தன்னால் புரிந்துகொள்ள முடியும் என்று நினைத்தால் அந்த எறும்பினால் புரிந்துகொள்ள முடியுமா? புரிந்துகொள்ள முடியாது. எந்த மொழியில் சொன்னாலும் புரிந்துகொள்ள முடியாது. ஏனென்றால், Man is completely different from an ant.

அதுபோல, தன் பிரயத்தனத்தினால் எப்படியாவது தேவனைப் புரிந்துகொள்ளலாம், தேவனை விளங்கிக் கொள்ளலாம் என்ற மனிதனுடைய முயற்சி வியர்த்தமானது. தேவனே தன்னை வெளிப்படுத்தி னால்தவிர மனிதன் தேவனைப் புரிந்துகொள்வது என்பது அரிதான காரியம். அது நடைபெறமுடியாத காரியம்.

## தேவன் தம்மை வெளிப்படுத்துகிறார்

தேவன் இரண்டு வழிகளிலே மனிதர்களோடு பேசியிருக்கின்றார். ஒன்று, *தேவனுடைய வார்த்தையாகிய.* நம்முடைய கைகளில் இருக்கின்ற பரிசுத்த வேதாகமம். இன்னொன்று, *ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து.* வார்த்தை என்பது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு இன்னொரு பெயர். "ஆதியிலே வார்த்தை இருந் தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது" (யோவான் *1:1*). வார்த்தை என்பது ஒரு மனிதனுடைய இருதயத்தின் உட்கிடக்கைக்கு செயல்வடிவம் கொடுப்பது. தன் இருதயத்தின் ஆழத்தில் இருப்பதை மனிதர்கள் புரிந்துகொள்ளும் வண்ணம் கொடுப்பதுதான் வார்த்தை.

தேவனுடைய இருதயம் எப்படிப்பட்டது? தேவன் எப்படிப்பட்டவர்? அவருடைய குணம் என்ன? அவ ருடைய கட்டமைப்பு என்ன? அவருடைய வழிகள் என்ன? அவருடைய பிரமாணங்கள் என்ன? அவருடைய நோக்கம் என்ன? அவருடைய திட்டம் என்ன? இந்த உண்டாக்கப்பட்ட படைப்பிலே அவர் எதைச் சாதிக்க விரும்புகிறார், எதைச் செய்துமுடிக்க விரும்புகிறார் போன்ற காரியங்களையெல்லாம் நாம் புரிந்துகொள்ள வேண்டுமென்றால் இரண்டு உதவிகள் நமக்கு உண்டு, மாபெரும் உதவிகள். *ஒன்று, தேவனுடைய வார்த்தை என்று நாம் சொல்கின்ற பரிசுத்த வேதாகமம். இன்னொன்று, தேவனுடைய உயிர்வாழும் வார்த்தையாகிய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து.*

தேவனுடைய வார்த்தையும், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவும் தேவன் யார் என்பதை நமக்கு வெளிப் படுத்துகிறார். “தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை; பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்” (யோவான் 1:16). ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தேவனை வெளிப்படுத்துகிறவர் என்று நாம் பார்க்கின்றோம்.

### தேவனை வெளியாக்குகிற பொறுப்பு நமக்கு உண்டு

தேவன் தம்மை எப்படி வெளியாக்க விரும்புகிறார் என்பதே நான் இன்று உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிற காரியம். நாம் தேவனுடைய மக்கள் என்ற முறையில் தேவனை எப்படி இந்த உலகத்துக்கு வெளியாக்க வேண்டும் என்பதைப்பற்றிய தெளிவு நமக்கு இருக்க வேண்டும். நான் மீண்டும் என் பாரத் தைச் சொல்கிறேன். தேவன் தம்மை எப்படி வெளியாக்க விரும்புகிறார்? தேவனுடைய மக்களாகிய நமக் குத் தேவனை வெளியாக்குகிற பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் அந்தப் பொறுப்பை எவ்வாறு நிறைவேற்ற வேண்டும் என்று பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தேவனை வெளியாக்கினார். ஆனால், அதோடு தேவனுடைய திட்டம் நின்றுவிடவில்லை. அவரை விசுவாசிக்கின்ற ஒரு கூட்டம் மக்கள்மூலமாகவும், ஒரு சமுதாயம்மூலமாகவும், அவர் தம்மை வெளியாக்க விரும்புகிறார். தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து தேவனை வெளி யாக்கினார். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற நாம் எல்லாரும் தேவனுடைய குமாரர்களாக மாற்றப் பட்டிருக்கிறோம். இயேசுகிறிஸ்து தேவனுடைய முதல் மகன் என்றால் நாம் அவருடைய இரண்டாவது மகன், மூன்றாவது மகன், நான்காவது மகன் என நாம் பல மகன்களாய் இருக்கிறோம் என்று ரோமர் 8:29 சொல்கிறது. எப்படி முதல் மகனாகிய இயேசுகிறிஸ்து தேவனை வெளியாக்கினாரோ அதுபோல அவருடைய பல மகன்களாகிய நாமும் தேவனை வெளியாக்குவதற்காக அழைக்கப்பட்டிருக்கிறோம்.

### தேவனைப் பல்வேறு வழிகளில் வெளியாக்குதல்

தேவனைப் பல்வேறு விதங்களிலே அறிமுகப்படுத்தலாம். “நல்ல காலம் பிறக்குது, நல்ல காலம் பிறக் குது” என்று தேவனை அறிமுகப்படுத்துகிறவர்களும் உண்டு. தீய மனிதர்கள்கூட கோயில் என்கிற ஒரு இடத்திற்குப் போய் உண்டியலில் கோடிக்கணக்கான ரூபாயைக் காணிக்கையாகப் போடுகிறார்கள். என்ன நம்பிக்கையிலே அதைப் போடுகிறார்கள்? கோடிக்கணக்கான ரூபாயைக் கொண்டுபோய் கோயில் என்று அழைக்கப்படுகிற ஒரு இடத்திலே, ஒரு உண்டியலிலே, அவர்கள் கடவுளுக்கு இடுகின்றார்கள். கடவுளைப் பற்றிய அவர்களுடைய கருத்து என்ன? அந்த கோடிக்கணக்கான ரூபாயைப் பார்த்தவுடனே தேவன் உண்மையிலேயே மனம் மகிழ்ந்து, கொண்டாடி, குதூகலித்து அவனை ஆசீர்வதித்துவிட வேண்டும் என் பதா? “கடவுள் நம்மை ஆசீர்வதிப்பார்” என்பதுதான் அவருடைய எதிர்பார்ப்பு. அவர்களைப்பொறுத்தவரை ஆசீர்வாதம் என்றால் அவர்களுடைய தொழிலிலே வெற்றி கிடைக்க வேண்டும் அல்லது அவர்களுடைய வாழ்க்கையிலே அவர்கள் விரும்புகிற ஒரு கணவன் அல்லது மனைவி அல்லது பிள்ளைகள் கிடைக்க வேண்டும் அல்லது பிள்ளைகள் எதிலோ வெற்றி பெற வேண்டும். இப்படிப் பல நோக்கங்களுக்காக அவர்கள் தேவனைத் தேடுகிறார்கள். இதுதான் தேவனைப்பற்றிய அவர்களுடைய புரிந்துகொள்ளுதல்.

ஆனால், நாம் இப்பொழுது சொல்கிறோம். தேவன் மனிதனுக்காக வைத்திருக்கிற நோக்கம் வெறுமனே இப்படிப்பட்ட வெற்றிகளைத் தருவது அல்ல. இப்படிச் சொன்னால் யாரும் கடவுளிடத்தில் வரமாட்டார்கள். ஒரு ஆசிரமமோ அல்லது ஒரு மடமோ கட்டி, “இங்கு வருகின்ற எல்லாருடைய பிரச்சினையையும் என் னால் தீர்க்க முடியும். ஏனென்றால், கடவுளோடு எனக்கு நெருங்கின தொடர்பு உண்டு,” என்று ஒருவன் சொன்னால் அங்கு நிறையப்பேர் போவார்கள். குருக்கள் அல்லது சாமியார்கள் என்ற பெயர் வைத்துக் கொண்டால் போதும், அங்கு நிச்சயமாக மனிதர்கள் கூடுவார்கள். நான் தேவனை அறியாத மக்களைப் பற்றிச் சொல்லவில்லை. தேவனை அறிந்த, இயேசுகிறிஸ்துவின் பெயரைச் சூட்டியிருக்கின்ற, கிறிஸ் தவர்கள் என்ற பெயரைத் தரித்திருக்கின்ற மக்களும்கூட எதைச் சொல்லி ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து விடம் மக்களை ஈர்க்கின்றார்கள்? “நீ இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டால், அவர் உன்னை ஆசீர்வதிப் பார்” என்ற ‘நல்ல காலம் பிறக்கிறது’ என்ற செய்தியைத்தான் பெருமபாலும் அறிவிக்கிறார்கள்.

அவர்கள் இயேசுகிறிஸ்துவிடம் வரும்போது ஒருவேளை கோயில் மாறுபடலாம்; ஆனால், அவர்களுடைய நோக்கம் மாறுபடவில்லை. அந்தக் கோயிலில் காணிக்கை போட்டாலும் கடவுள் தன்னை ஆசீர்வதிக்க வேண்டும் என்பதுதான் நோக்கம். இந்தக் கோயிலில் கொண்டு வந்து போட்டாலும் கடவுள் தன்னை ஆசீர்வதிக்க வேண்டும் என்பதுதான் நோக்கம்.

A.W. Tozer என்ற ஒரு பரிசுத்தவான் இருந்தார். இன்றைய நவீன கிறிஸ்தவம் “We can have fun, only change the domain” என்று சொல்லுகிறது என்று அவர் சொல்கிறார். “முந்தி திரைப்படப் பாடல்கள் பாடி

ஒருவன் கதாநாயகனானான் என்றால் அவனுக்கு அதே வாய்ப்பை இன்றைய நவீன கிறிஸ்தவம் தருக றது. இன்றைக்கும் அவன் பாடலாம். அதேபோல் கதாநாயகனாக மாறிவிடலாம். ஒரேவொரு மாற்றம். முன்பு திரைப்படப் பாடல்களைப் பாடினான். இப்போது கிறிஸ்தவப் பாடல்கள் பாடலாம். மாம்சத்திற்குரிய ஒன்றை கணப்பொழுதிலே நாம் ஆவிக்குரியதாக மாற்றிவிடுகிறோம்". இதை நான் சொல்லவில்லை. இது சகோதரர் A.W.Tozer சொன்னது.

## தேவனை வெளியாக்குவதே அவருடைய நோக்கம்

ஒரு கூட்டம் மனிதர்கள்மூலமாகத் தம்மை வெளியாக்க வேண்டும் என்பது தேவனுடைய நோக்கம். தேவனை அவருடைய எல்லாக் குணத்திலும், நற்பண்புகளிலும் வெளியாக்குவதுதான் அவரை வெளி யாக்குவதின் பொருள். தேவன் அன்பாயிருக்கிறார்; தேவன் நீதியாயிருக்கிறார்; தேவன் பரிசுத்தமாயிருக் கிறார்; தேவன் ஒளியாயிருக்கிறார்; தேவன் சாந்தமாயிருக்கிறார் என்று தேவனை வருணிக்கவோ, சித்திரிக் கவோ முடியாது. He is inexhaustible. தேவனுடைய இருதயம் எப்படிப்பட்டது, தேவனுடைய குணம் எப்படிப்பட்டது என்று நம்மால் வருணித்து முடியாது. அவை எல்லாவற்றையும் தேவன் இந்தப் பூமியிலே மனிதர்கள்மூலமாக வெளியாக்க விரும்புகிறார்; நம்மூலமாக வெளியாக்க விரும்புகிறார்.

தேவன் தம்மை வெளியாக்குவதைப்பற்றி இரண்டே இரண்டு குறிப்புகளைத்தான் நான் சொல்ல விரும்பு கிறேன். முதலாவது, உண்மையிலேயே தேவனை வெளியாக்குகிற வாழ்க்கை எப்படிப்பட்ட வாழ்க்கை யாக இருக்கும்? இரண்டாவது, மனிதன் அப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்வது உண்மையிலேயே சாத்தியமா?

### 1. தேவனை வெளியாக்குகிற வாழ்க்கை

தேவன் பரிசுத்தமானவர். ஆகவே, தேவனை வெளியாக்குவதென்றால் மனிதனும் பரிசுத்தமான வாழ்க்கை வாழ வேண்டும். முதலாவது ஒரு மனிதனுக்கு இது தெரிய வேண்டும். "நான் பரிசுத்தர். ஆகையால், நீங் களும் பரிசுத்தராயிருங்கள்" *(1 பேதுரு 1:16)* என்று வேதாகமம் சொல்கிறது. "நான் பரிசுத்தராயிருக்கிறது போல நீங்களும் பரிசுத்தராயிருங்கள்," என்பது தேவனுடைய கோரிக்கை. "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்" *(மத். 5:48)* என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்னார். எந்த மனிதனும் இப்படிப்பட்ட கோரிக்கைகளை எதிர்த்துப் பேச முடியாது. "ஓ! இயேசுகிறிஸ்து தவறாய்ப் போதித்தார். அவர் பரிசுத்தமாக இருக்கச் சொல்கிறார். பூரணராக இருக்கச் சொல்கிறார். இந்தக் கிறிஸ்தவர்கள் தவறான உபதேசத்தைச் சொல்கிறார்கள்," என்று யாராவது சொல்ல முடியுமா? இயேசுகிறிஸ்து "நீங்கள் பரிசுத்தமாக இருங்கள்; நீதியாய் இருங்கள்; ஒளியாய் இருங்கள்; பூரணராய் இருங்கள்," என்று சொன்னார். "இவர் தவறாகப் போதித்தார். மனிதர் களைத் தவறான திசையிலே நடத்தினார் என்று யாராவது குற்றம்சாட்ட முடியுமா?

நான்கு நற்செய்தி நூல்களையும் வாசித்துப் பாருங்கள். உண்மையிலேயே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மனிதர்களிடத்திலே எதைக் கோரினார் என்று நன்றாய்ப் புரிந்துகொள்ள வேண்டும். அவர் எதைக் கோரினார் என்றால் அவர் இந்தப் பூமியிலே வாழ்ந்ததுபோல மனிதர்கள் வாழ வேண்டும் என்று கோரி னார். "நான் உங்கள்மேல் அன்பாயிருப்பதுபோல நீங்களும் ஒருவர்மேல் ஒருவர் அன்பாயிருங்கள்". "அன் பில் மட்டுமல்ல. பரிசுத்தம், நீதி, தாழ்மை என்று எல்லா விதத்திலும், ஒருவன் என்னைப் பின்பற்ற விரும்பி னால் அவன் தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" என்றார். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மனிதர்கள் தன்னைப் பின்பற்றி வருமாறு, பின்பற்றி வருவதென்றால் அவர் வாழ்ந்தது போல பூமியிலே வாழுமாறு, அழைப்பு விடுத்தார். கோரினார்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினுடைய வாழ்க்கை எப்படிப்பட்டது? அவர் அற்புதங்களைச் செய்தார், அடையாளங்களைச் செய்தார், பிசாசுகளைத் துரத்தினார், நோயுற்றவர்களைக் குணமாக்கினார், குருடர் களுக்குப் பார்வை கொடுத்தார், முடவர்களை நடக்கச் செய்தார், பல பிரசங்கங்களைப் பண்ணினார், பல காரியங்களைப் போதித்தார். இவைகளெல்லாம் உண்மை. இவைகளையெல்லாம் நீங்கள் நிதானித்துப் பார்க்கலாம். ஆனால், எல்லாக் காரியங்களையும் நாம் கூட்டித் தொகுத்துப் பார்த்தோமென்றால் காரியத் தின் கடைத்தொகை என்னவாக இருக்கும் தெரியுமா? ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தான் இந்தப் பூமியிலே வாழ்ந்ததுபோல மனிதர்களும் வாழ வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

நீங்கள் தேவனுடைய வார்த்தையை வாசிக்கின்றீர்கள். ஓரளவுக்கு தேவனுடைய வார்த்தையில் உங்க ளுக்குப் பரிச்சயம் உண்டு. எனவே, தேவனுடைய வார்த்தை தெரியாதவர்களிடம் நான் பொய் சொல்ல வில்லை. "எனக்கு மட்டும்தான் வேதம் தெரியும். நான் மட்டும்தான் வேதத்தைப் புரிந்துகொண்டிருக் கிறேன்" என்பதுபோல் நான் பேச முடியாது. உங்களுக்கு உண்மை தெரியும். நீங்கள் இதுவரை படித்த தெல்லாம் உங்களுடைய கண்களுக்குமுன்பாக வரும். உண்மையிலேயே புதிய ஏற்பாட்டிலே நான்கு

நற்செய்தி நூல்களும் வலியுறுத்துவது இதுதானா அல்லது வேறு எதையாவது வலியுறுத்துகிறதா என்று நீங்கள் சீர்தூக்கிப்பார்க்க வேண்டும்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தன்னிடத்தில் வந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு நன்மைகள் செய்தார். ஆனால், அவர் இந்தப் பூமியை விட்டுப் போகும்போது 120 பேர் அவருடைய நோக்கத்திற்காக, திட்டத்திற்காக, கூடினார்கள் என்று எழுதியிருக்கிறது. அப்போஸ்தலர் நடபடிகள் முதல் அதிகாரத்திலே வாசிக்கும்போது நூற்றிருபது பேர் அங்கு மேலறையிலே கூடினார்கள் என்று எழுதியிருக்கிறது. நன்மைகள் பெற்றவர் ஆயிரக்கணக்கானோர். ஆனால், அவருடைய நோக்கத்திற்காக, திட்டத்திற்காக, தங்களைக் கையளித்தவர்கள், தங்களைத் தத்தம் செய்தவர்கள், தங்களை ஒப்புக்கொடுத்தவர்கள், those who had committed to His cause were 120. அவர் ஒன்றும் நன்மை செய்யும்போது முதலிலே கையெழுத்து வாங்கிக்கொண்டு நன்மை செய்வதில்லை. “நீ கடைசிவரை எனக்கு உண்மையாயிருப்பாயா? உன்னை எனக்கு commit பண்ணுவாயா?” என்றெல்லாம் அவர் வாக்குறுதி வாங்கவில்லை. “அவர் நன்றியறியாதவர்களுக்கும், துரோகிகளுக்கும் நன்மை செய்கிறவர். அவர் நல்லோர்மேலும், தீயோர்மேலும் சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும், அநீதியுள்ளவர்கள்மேலும் தமது மழையைப் பெய்யப்பண்ணுகிறார்”.

நன்றாய்க் கவனியுங்கள். வாழ்க்கையில் ஒரு நன்மை குறைவுபடுகிறதென்றால் அதற்காகத் தேவனிடத்தில் கெஞ்சி, கூத்தாட வேண்டும் அல்லது எப்படியோ அவருடைய கைகளை முறுக்கி அந்த நன்மையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் தேவனைப்பற்றிய உங்கள் கற்பனை என்றால் அந்தக் கற்பனையை நீங்கள் மாற்றிக்கொள்ளுங்கள். ஒரு நன்மைக்காகக் கெஞ்சி, கூத்தாடி, கதறி, அவருடைய கைகளைப் பிடித்து முறுக்கி, உபவாசம்பண்ணி, காணிக்கை கொடுத்து அல்லது அவருக்கு நெருக்கமான யாராவது இருக்கிறார்களா என்று தேடிப்பிடித்து அவருடைய சிபாரிசுக்காகத் தவம் கிடப்பது அல்லது அவரிடம் போய் “நீங்களாவது ஒரு வார்த்தை சொல்லி இந்த நன்மையை எனக்குத் தருவதற்கு ஏற்பாடு செய்யக்கூடாதா?” என்பதுபோலெலாம் எதுவும் செய்ய அவசியமில்லை. “அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறவராயிருக்கிறார்”. அப்படியிருக்கும்போது அவரை நம்புகின்ற, அவரை விசுவாசிக்கின்ற, அவரை நேசிக்கின்ற அவருடைய பிள்ளைகளுக்கு நன்மை செய்வது அதிக நிச்சயமாயிருக்கும்.

தம்முடைய சீடர்களுக்கு ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து போதிக்க முயன்ற ஒரு அடிப்படை காரியம். “தேவனை அறியாத மக்களைப்போல இந்த உலக நன்மைகளைக்குறித்து நீங்கள் பதறாதீர்கள். என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கேட்காமலும், கவலைப்படாமலும் இருங்கள். இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பிதா அறிந்திருக்கிறார். ஆகையால், முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும். உங்களுக்கு இந்தப் பூமிக்குரிய நன்மைகள் வேண்டும் என்று அறிந்து கொடுக்கின்ற தந்தை உங்களுக்கு உண்டு,” என்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய சீடர்களுக்குச் சொல்லிக்கொடுத்தார். இந்த உலகத்து மக்களைப்பொறுத்தவரை அப்படியில்லை. அவர்கள் காணிக்கை என்ற பெயரிலோ அல்லது வழிபாடு, தொழுகை, ஆராதனை என்ற பெயரிலோ அல்லது கடவுளுக்கு பூஜை செய்வது, புனஸ்காரம் செய்வது என்கிற பெயரிலோ எதையோ செய்து கடவுளிடமிருந்து அந்த நன்மையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறார்கள். அவர்களுடைய மனப்பாங்கு என்னவென்றால் கடவுளுக்கு எதையாவது கொடுத்து, அவரிடமிருந்து எதையாவது ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆனால், இந்தப் பூமிக்குரிய நன்மைகளைப் பெறுவதற்கு மனிதர்கள் தேவனுக்கு எதையாவது கொடுக்க வேண்டிய அவசியமில்லை. நன்மைகளை அவர் கொடுக்கிறார். ஆனால், அவருடைய நோக்கம் அதுவல்ல. இது என்னுடைய முதல் குறிப்பு.

### கிறிஸ்துவைப் பின்பற்றுகிற மேன்மையான வாழ்க்கை

அவர் தம் நோக்கத்தை “நீ என்னைப் பின்பற்று” என்று தெளிவுபடுத்தினார். இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றி வாழ்கின்ற ஒரு மனிதனுடைய வாழ்க்கை மிக உயர்ந்த வாழ்க்கையாக இருக்குமா அல்லது மிகத் தாழ்வான வாழ்க்கையாக இருக்குமா அல்லது “நான் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றி வாழ்ந்தேன்; ஏமாந்துவிட்டேன் ஐயா!” என்று யாராவது சொல்வார்களா? “நான் இளைஞனாயிருந்தேன். முதிர்வயதுள்ளவனுமானேன். ஆகிலும் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை,” (சங். 37:25) என்பது தாவீதின் சாட்சி. நமக்குமுன்பாக மேகம்போன்ற திரளான சாட்சிகள் 80 வயது, 90 வயது, 100 வயதுவரை வாழ்ந்து போயிருக்கிறார்கள். ஒருவன்கூட தன்னுடைய

85 வயதிலே "மாயை, மாயை, சூரியனுக்குக்கீழே நான் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றியதால் எல்லாம் மாயை" என்று சொல்லவில்லை.

"நான் 65 ஆண்டுகள் இந்த ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகின்றேன். ஒருமுறைகூட அவர் எனக்கு உண்மையற்றவராக இருந்ததில்லை. நான் எப்படி அவருக்கு உண்மையற்றராக இருப்பது?" என்று சொன்ன பரிசுத்தவான் யார் தெரியுமா? "ஒருமுறை நீ அவரை மறுதலித்துவிடு. நான் உன்னை விடுதலை செய்துவிடுகிறேன்," என்று சொன்ன நீதிபதிக்குமுன்பாக யோவானுடைய நேரடி மாணவனாகிய பொலிகார்ப் என்ற 85 வயதான பரிசுத்தவான் நீதிமன்றத்தில் சொன்ன கூற்று இது. அவரும் என்னைப் போல 19 அல்லது 20 வயதிலே இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருப்பார் என்று நினைக்கிறேன். "65 வருடங்கள் நான் என்னுடைய ஆண்டவரை சேவித்து, பணிவிடை செய்து வருகிறேன். ஒருமுறைகூட அவர் எனக்கு உண்மையற்றவராக இருந்ததில்லை. நான் அவருடைய பெயரை மறுதலிப்பது எப்படி?"

"மனிதர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும் படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக்கடவது," (மத். 5:16) என்று ஆண்டவராகிய இயேசு சொல்கிறார். "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள். நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக் கிறீர்கள்," என்று அவர் தம் சீடர்களுக்குப் போதித்தார்.

இதன் பொருள் என்ன? நான் பொதுவாக பொருள்விளக்கம் கொடுப்பதற்குத் துணிவதில்லை. "இதற்கு அர்த்தம் அது, அதற்கு அர்த்தம் இது" என்பதை மிகப் பயபக்தியோடு சொல்வேன். இப்போது உப்பு என்றால் என்னவென்று அவரவர் தங்கள் கற்பனையின்படி சொல்லலாம். இயேசுகிறிஸ்துவின் மனதிலே என்ன இருந்திருக்கும் என்று ஓரளவுக்கு ஊகிக்கலாம். இவைகளையெல்லாம் ரொம்ப பயபக்தியோடு சொல்ல வேண்டும். "நான் சொல்வதுதான் சட்டம்" என்று சொல்ல முடியாது. உப்பு என்பது அன்று அவர்கள் பொருள்கள் கெட்டுப்போகாமல் பாதுகாப்பதற்கு பயன்படுத்தின ஒன்று. நம்முடைய மக்கள் "உப்பை சுவைக்காகப் பயன்படுத்துகிறோம்," என்று சொல்வார்கள். உப்பு பொருள்கள் கெட்டுப் போகா மல் இருப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது. அந்தக் காலத்தில் குளிர்சாதனப் பெட்டி, ஐஸ் போன்றவைகள் இல்லாததால் அவர்கள் உப்பைப் பயன்படுத்தினார்கள். அதுபோல இந்த உலகம் கெட்டுப்போகாமல், பாழ்பட்டுப்போகாமல் இருப்பதற்கு தேவன் தம்முடைய மக்களை இந்தப் பூமியிலே வைத்திருக்கிறார். அவர்கள் இந்த உலகத்திற்கு உப்பாக இருக்கின்றார்கள். இந்த வேதம் முழுவதும் அப்படிப்பட்ட வாக்கியங்கள் இருக்கின்றன.

## தேவனுடைய மக்களின் அழைப்பு

ஒருசில வாக்கியங்களை மட்டும் நான் வாசிக்க விரும்புகின்றேன். உண்மையாகவே ஒரு கிறிஸ்தவனுடைய அழைப்பு என்ன என்று பார்க்க வேண்டும். "கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள். உங்களில் இருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக் கும் சாந்தத்தோடும், வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்" (1 பேதுரு 3:15). "கிறிஸ்துவுக்கேற்ற உங்கள் நல்ல நடக்கையைத் தூஷிக்கிறவர்கள் உங்களை அக்கிரமக்காரரென்று உங்களுக்கு விரோதமாக சொல்லுகிற விஷயத்தில் வெட்கப்படும்படிக்கு நல்மனச்சாட்சி உடையவர்களாய் இருங்கள். தீமைசெய்து பாடநுபவிப்பதிலும் தேவனுக்குச் சித்தமானால் நன்மை செய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும்" (வ. 16, 17).

பேதுருவினுடைய முதல் கடிதத்தைப்பற்றிய ஒரு சுருக்கமான பின்புலத்தைக் கொடுக்க விரும்புகிறேன். தேவனுடைய மக்கள் இயேசுகிறிஸ்துவின் நாமத்தைத் தரித்திருந்ததற்காகத் துன்புறுத்தப்பட்ட நாட்களிலே பேதுரு இந்தக் கடிதத்தைக் கிறிஸ்தவர்களுக்கு எழுதுகின்றார். இது துன்புறுகின்ற தேவனுடைய மக்க ளுக்கு எழுதப்பட்ட ஒரு கடிதம். இயேசுகிறிஸ்துவின் நாமத்திற்காகத் துன்புறுத்தப்படுவது தேவனுடைய மக்களுக்குப் புதிதானது அல்ல. "20ஆம் நூற்றாண்டிலே இந்தியாவிலே, இயேசுகிறிஸ்துவின் நாமத்திற் காக நாம்தான் துன்புறுத்தப்படுகிறோம்," என்றெல்லாம் நாம் நினைத்துவிட வேண்டாம். "உங்களுக்குள்ளே பற்றியெரிகிற இந்த சோதனை என்கிற அக்கினியைப்பற்றி இது ஏதோ நூதனமானது என்று நீங்கள் நினைத்துவிட வேண்டாம்," என்று பேதுரு சொல்கிறார்.

இயேசுகிறிஸ்துவைப் பின்பற்ற விரும்புகிற ஒரு மனிதனுக்கு இப்படிப்பட்ட துன்பங்கள் உண்டு. ஆனால், எல்லாக் காலத்திலும், துன்புறுத்தப்படுகிற காலத்திலும், தேவனுடைய மக்களுடைய அழைப்பு என்ன என்பதை அவர் தெளிவாய்ச் சொல்கிறார். "கிறிஸ்துவுக்கேற்ற உங்கள் நல்ல நடக்கையை தூஷிக்கிற வர்கள்..." இயேசுகிறிஸ்துவினிமித்தம் நம்முடைய நல்ல நடக்கையை மக்கள் தூஷிப்பார்கள்.

இரண்டே இரண்டு குறிப்புகள்தான். நான் இன்னும் முதல் குறிப்பில்தான் நின்றுகொண்டிருக்கிறேன். முதல் குறிப்பு என்னவென்றால் அவர் நடந்ததுபோல நாமும் நடப்பதற்காக ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நம்மை அழைத்திருக்கிறார்.

அதே *1* பேதுரு *2*ஆம் அதிகாரம் *19, 20, 21* ஆம் வசனங்களில், "தேவன்மேல் பற்றுதலாயிருக்கிற மனச்சாட்சியினிமித்தம் ஒருவன் அநியாயமாய்ப் பாடுபட்டு உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகித்தால் அதுவே பிரீதியாயிருக்கும்". ஆகவே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றினால் அநியாய மாய்ப் பாடுபட வேண்டிய அவசியம் ஏற்படுமா? நிச்சயமாக ஏற்படும்.

இலஞ்சம் கொடுக்க வேண்டும் அல்லது ஒரு பொய் சொல்ல வேண்டும் என்று வைத்துக்கொள்வோம். தேவன்மேல் பற்றுதலாயிருக்கிற நம்முடைய மனச்சாட்சியினிமித்தம் நாம் அப்படிப்பட்ட வழிகளிலே நடக்க மாட்டோம். அதன் காரணமாக நாம் துன்புறுவோம். தேர்வு எழுதும்போது எல்லாரும் பார்த்து எழுது கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். இது இப்போது மிகவும் சர்வசாதாரணமான காரியமாகிவிட்டது.. அந்த காலத்திலே பார்த்து எழுதுகிறவர்களை நூதனமாகப் பார்த்தார்கள். இப்போது அப்படியில்லை. பார்த்து எழுதாதவனை நூதனமாகப் பார்க்கிறார்கள். அவனைக் கிண்டல்செய்வார்கள், கேலிபண்ணு வார்கள். அவனைச் சித்திரவதை பண்ணி, கல்லூரியை விட்டு விரட்டிவிடுவார்கள் அல்லது அவன் அங்கே இருக்க வேண்டுமென்றால் துன்பப்பட வேண்டும். நிச்சயமாக ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் அடிச் சுவடில் நடக்கிற மக்கள் என்கிற முறையிலே நாம் அநியாயமாய்ப் பாடுபடுவோம். "இது எனக்கு முதலிலே தெரிந்திருந்தால் நான் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருக்க மாட்டேன்," என்று சிலர் சொன் னால். என் பதில் என்ன தெரியுமா? "பரவாயில்லை, இப்போது தெரிய வருகிறதில்லையா? இப்போது கூட உங்கள் முடிவை நீங்கள் மறுபரிசீலனை செய்துகொள்ளலாம்". "இல்லப்பா, இல்லப்பா. நீ என்னைப் பின்பற்ற விரும்புகிறாயா? பரவாயில்லை, பரவாயில்லை. கொஞ்சம் பார்த்து எழுதிக்கொள். அதற்காக என்னை விட்டுவிட்டுப் போய்விடுகிறேன் என்று சொல்லிவிடாதே," என்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஒருபோதும் சொல்லப்போவது இல்லை. "இப்போது பார், நீ என்னைப் பின்பற்ற விரும்பினால் நீயும் பார்த்து எழுதக் கூடாது. பார்த்து எழுதுவதற்கு நீ யாருக்கும் காட்டவும் கூடாது," என்று திட்டவட்டமாகச் சொல்லிவிடுவார். "ஒருவன் என்னைப் பின்பற்ற விரும்பினால் இந்த உலகம் முழுவதும் பார்த்து எழுதி னாலும் அவன் பார்த்து எழுதவும் கூடாது. பார்த்து எழுதுகிறவனுக்கு காட்டவும் கூடாது," என்றுதான் அவர் சொல்வார். உலகத்திலே பெரிய பாவம் பார்த்து எழுதுவதுதான் என்று நான் சொல்லவில்லை. அதை எடுத்துக்காட்டாகச் சொல்கிறேன். "இல்லை, இல்லை. எங்கள் கல்லூரியிலே ஆசிரியர்களே போதுமான அளவுக்கு பார்த்து எழுதுவதற்கு ஏற்பாடுகள் செய்து தருவார்கள்," என்று மாணவர்கள் சொன்னதுண்டு. நான் அப்படிப்பட்ட கல்லூரிகளைப் பார்த்திருக்கிறேன்.

இப்படிப்பட்ட உலகத்திலே நாம் வாழ்கிறோம். "நீங்கள் பார்த்து எழுத வேண்டாம் என்று சொல்கிறீர்கள். இது முடியவே முடியாது. ஆகவே, நான் உம்மைப் பின்பற்ற வேண்டும் என்றால், இயேசுவே நீர் உம்மை மாற்றிக்கொள்ள வேண்டும் அல்லது உம்மைப் பின்பற்ற முடியாது," என்று நாம் சொல்லலாம். ஆண்டவ ராகிய இயேசு தம்மை மாற்றிக்கொள்ளப்போவதில்லை.

இப்போது வாசிப்போம். "நீங்கள் குற்றம் செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடு சகித்தால் அதி னால் என்ன கீர்த்தி உண்டு? நீங்கள் நன்மை செய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாகப் பிரீதியாயிருக்கும்" (வ. *20*). அவர்களுக்கு ஆள் பலம் உண்டு; பத்துப்பேர் இருக்கிறார்கள், ஆயிரம் பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு இணையதளம் இருக்கிறது. அவர்களிடம் கோடிக்கணக்கான ரூபாய் இருக்கிறது. உடனே தேவனுடைய மக்கள் பயந்துபோய், "ஐயையோ, அவர் களிடம் ஆயிரம் பேர் இருக்கின்றார்கள் என்றால் நாம் எப்படியாவது ஐந்நூறு பேரைத் திரட்ட வேண்டும். அவர்களிடம் பத்து கோடி இருக்கிறதென்றால் நாம் எப்படியாவது ஐந்து கோடி திரட்ட வேண்டும். அவர்கள் கூட்டம் போட்டால் பத்தாயிரம் பேர் கூடுகிறார்களென்றால் நாம் கூட்டம் போட்டால் ஐயாயிரம் பேராவது கூட வேண்டும்," என்று நாம் பதற வேண்டுமா? நாம் தெருவிலே போவோம். தெருவிலே எதற் காகப் போவோம் என்றால் சுவிசேஷத்தை அறிவிக்கிறதற்காகப் போவோமேதவிர "எங்களுடைய கூட்டம் எவ்வளவு பெரிய கூட்டம்" என்று காண்பிப்பதற்காக நாம் ஒருநாளும் போக வேண்டிய அவசியமில்லை.

தேவனுடைய மக்கள் இந்த உலகத்திலே துன்பங்களைச் சகிக்கின்ற விதம் என்னவென்று தேவனுடைய வார்த்தை தெள்ளத்தெளிவாகக் கூறுகின்றது. அது அரசியல்வாதிகளும், உலகத்து மக்களும் பயன்படுத்து கிற விதம் அல்ல. "குற்றம் செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடு சகித்தால் அதினால் என்ன புகழ் உண்டு? நீங்கள் நன்மை செய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால்...".

இதுபோன்ற ஒரு வாழ்க்கையை இந்த உலகத்திலே வாழ்ந்த எந்த மனிதனாவது போதித்திருப்பான் என்றால், அவன் இந்த உலகத்திலே எந்த மூலையிலே பிறந்திருந்தாலும் சரி, வாழ்ந்திருந்தாலும் சரி,

அவனை எனக்குக் காண்பியுங்கள். நான் அவனைப் பின்பற்ற விரும்புகின்றேன். இதுதான் சிலுவை என்பதின் பொருள். "...அதுவே தேவனுக்குமுன்பாகப் பிரீதியாயிருக்கும்.

"இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள். ஏனெனில் கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார்" (வ. 21). ஆ! கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு நீங்கள் அவருடைய அடிச்சுவடுகளில் நடந்துவரும்படி, அடிச்சுவடுகளைப் பின்பற்றும்படி, உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். அந்த அதிகாரம் முழுவதையும் நீங்கள் வாசிக்க வேண்டும். 18ஆவது வசனம் மிகவும் அற்புதமான வசனம். "வேலைக்காரரே, அதிக பயத்துடனே உங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்". அது நல்ல வசனம். அதை எல்லாரும் புரிந்துகொள்வோம். எஜமான்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அதற்கு அடுத்து வருகிற வாக்கியம் கொஞ்சம் கஷ்டமாக இருக்கும். "நல்லவர்களுக்கும் சாந்தகுணமுள்ளாவர்களுக்கும் மாத்திரமல்ல, முரட்டுக்குணமுள்ளவர்களுக்கும் கீழ்ப்படிந்திருங்கள்". அது எப்படி முடியும்?

ஒரு ஆசிரியர் அல்லது ஒரு உயர்அதிகாரி நம்மை மிகக் கடூரமாக நடத்துகிறார் என்று வைத்துக்கொள்வோம். அவருக்குக் கீழ்ப்படிய முடியுமா? முடியாது. இது நல்ல நற்செய்தியே இல்லை என்று நீங்கள் நினைக்கலாம். நல்ல நற்செய்தி என்ன பண்ணியிருக்க வேண்டும்? "தேவன் உங்கள் பாடுகளை அறிவார்; துக்கங்களை அறிவார்; கவலைகளை அறிவார். அருமையான மகனே, மகளே, கலங்காதே. அவைகளையெல்லாம் அவர் தீர்ப்பார்," என்றால் அது நற்செய்தியாகக் கருதப்படும். உங்களுடைய பிரச்சனைகளைக் குறித்து இயேசுகிறிஸ்துவுக்கு அக்கறையில்லை அல்லது அவர் அவைகளைத் தீர்க்கமாட்டார் என்று நான் சொல்லவில்லை. நீங்கள் நன்றாய்ப் பொறுமையாய்க் கவனியுங்கள்.

உண்மையாகவே உங்கள் பிரச்சனைகளை, சிக்கல்களை, தீர்ப்பதிலே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஒரு தகப்பனைவிட, தாயைவிட மிகுந்த ஈடுபாடு உண்டு. ஆனால், அதைத் தீர்க்கிற வழி உண்டு.

முதலாவது, ஒருவன் இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதினுடைய பொருள் என்னவென்றால் அவன் இயேசுகிறிஸ்து வாழ்ந்ததுபோல இந்தப் பூமியிலே வாழ்வதற்கு விரும்புகிறான். அப்படி விரும்பாவிட்டால் அவன் தன்னை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறேன் என்று சொல்லவேண்டிய அவசியமில்லை. இயேசுகிறிஸ்துவை எதற்காக விசுவாசிக்கிறீர்கள்? "ஏனென்றால் நான் நோய்வாய்ப்பட்டிருந்தேன். அவர் என்னுடைய நோயை சுகமாக்கினார். ஆகவே விசுவாசித்தேன்," என்பதல்ல. "அவர் நன்மை செய்தார். ஆனால், நான் அவர் வாழ்ந்ததுபோல வாழ விரும்பினேன்," என்று சொல்பவன்தான் கிறிஸ்தவன்.

ஆகவே, நாம் மதத்தைப் பரப்புகிறவர்கள் அல்ல. *நாம் இயேசுகிறிஸ்துவை வாழ்கின்றவர்கள், இயேசுகிறிஸ்துவால் வாழ்கின்றவர்கள். இயேசுகிறிஸ்து வாழ்ந்ததுபோல் வாழ்கிறவர்கள்.*. இயேசுகிறிஸ்து ஒரு மதத்தை ஸ்தாபிக்கவில்லை. இயேசுகிறிஸ்துவைப்பற்றி இந்த உலகத்திற்கு நாம் சொல்ல வேண்டுமென்றால், காண்பிக்க வேண்டுமென்றால், எப்படிக் காண்பிக்க வேண்டும்?

அப்போஸ்தலர் நடபடிகளிலே பல உதாரணங்கள் உண்டு. அப்போஸ்தலனாகிய பவுல் ஆண்டவராகிய இயேசுவின் நற்செய்தியை அறிவிக்கின்றார். முதலாவது தெசலோனிக்கேயில் அறிவிக்கின்றார். பிறகு பெரேயாவில் அறிவிக்கின்றார். அதைத் தொடர்ந்து அவர் அத்தேனே பட்டணத்தில் அறிவிக்கின்றார். ஒவ்வொரு ஊரிலும் வாய்ப்பு கிடைக்கும்போது அவர் இயேசுகிறிஸ்துவை அறிமுகப்படுத்துகிறார். "உண்மையிலேயே இயேசுகிறிஸ்து யார்? இயேசுகிறிஸ்துவைப்பற்றி நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?" என்று கேட்டால் அந்த இடத்திலே அவர் பேசுகிறார்.

அப்போஸ்தலர் 17ஆம் அதிகாரத்திலே பவுல் அத்தேனே பட்டணத்தில் எப்படி நற்செய்தியை அறிவிக்கிறார் என்பது நாம் நற்செய்தியை அறிவிப்பதற்கு ஒரு நல்ல மாதிரி. "உங்கள் பட்டணத்திலே நான் நடந்துகொண்டிருந்தேன். பல பலிபீடங்கள் இருந்தன. ஒவ்வொரு பலிபீடத்திலும் ஒரு கடவுளுடைய பெயர் எழுதியிருந்தது. கடவுள் X, கடவுள் Y, கடவுள் Z என்று எழுதியிருந்தது," என்று சொல்கிறான். பெயர்களைச் சொல்ல விரும்பவில்லை. அப்போஸ்தலனாகிய பவுலும் சொல்ல விரும்பவில்லை. ஒரு பலிபீடத்திலே, "அறியப்படாத தேவனுக்கு" என்று எழுதியிருந்தது.

இந்த நிகழ்ச்சியைப்பற்றி டேவிட் பாசன் என்பவர் மிக அழகாகச் சொல்கிறார். அத்தேனே பட்டணத்திலே ஒரு பெரிய நிலநடுக்கமோ, ஒரு வாதையோ, வந்தபோது அவர்கள் கடவுளுக்குப் பலியிட வேண்டுமென்று நினைத்தார்களாம். "கடவுள் மிகக் கோபமாக இருக்கிறார். உடனே பலி செலுத்தி அவருடைய கோபத்தைத் தணிக்க வேண்டும்," என்று நினைத்தார்களாம். பல நூற்றுக்கணக்கான, பல ஆயிரக்கணக்கான கடவுள்கள் இருக்கிறார்களே! எந்தக் கடவுள் கோபப்பட்டுவிட்டார் என்று தெரியாத காரணத்தினாலே அவர்கள் கடவுளுக்கென்று ஒரு ஆட்டைத் தெரிந்தெடுத்து அனுப்பினார்களாம். அந்த ஆடு எங்குபோய்ப் படுத்துக்கொள்கிறதோ அந்தப் பலிபீடத்திலே அந்தக் கடவுளுக்குப் பலியிட வேண்டும் என்று சொன்னார்

களாம். ஆடு போனது. அது எந்தப் பலிபீடத்திலும் படுக்காமல், ஒரு சாதாரணமான இடத்திலே போய் படுத்துவிட்டது. அப்போது அவர்கள், “ஓ! நமக்குத் தெரிந்த கடவுள்கள்தவிர வேறு ஒரு கடவுள் இருக் கிறார்,” என்று சொல்லி அங்கே ஒரு பலிபீடம் கட்டி, அதில் “அறியப்படாத தேவனுக்கு” என்று எழுதி னார்களாம். (டேவிட் பாசனுடைய Unlocking the Bible என்ற புத்தகத்தை நீங்கள் படிக்கலாம்).

“அறியப்படாத தேவனுக்கு”. அதை பவுல் பயன்படுத்துகிறார். “அறியப்படாத தேவனுக்கு என்று ஒரு பலிபீடம் கட்டியிருக்கிறீர்களே. இதுவரை நீங்கள் அறியாதிருந்த அந்த தேவனைத்தான் உங்களுக்கு அறிவிக்க வந்திருக்கிறோம்”. முதலாவது, கைகளினாலே கட்டப்பட்ட கோவில்களிலே அவர் வாழ்வ தில்லை என்று அவர் சொல்கிறார் அல்லது மனிதர்கள் செய்கின்ற பணிவிடைகளில், பூஜை, புனஸ்காரங் களில் அவருக்கு ஈடுபாடு இல்லை என்று சொல்லுகிறார்.

மனிதனுடைய மதங்களை இந்த இரண்டு வார்த்தைகளிலே அடக்கி விடலாம். கோவில் என்று ஒன்று இல்லையென்றால், பூஜை, புனஸ்காரங்கள் அல்லது சடங்குகள் ஆச்சாரங்கள் என்று இல்லையென்றால் மனிதர்கள் என்ன செய்வார்கள்? ஞாயிற்றுக்கிழமையானால், செவ்வாய்க்கிழமையானால், வெள்ளிக் கிழமையானால் எங்கு போவது? இந்த உலகத்திலே கோவில் என்றே ஒன்று இல்லை என்று கற்பனை செய்து பாருங்கள். நம் இடங்களில் கோவில் இல்லாமல் இருக்க முடியாது. சரி, அதற்கு மேலே சடங்குகள், ஆச்சாரங்கள், பூஜைகள், புனஸ்காரங்கள் ஒன்றுமே கிடையாது. அங்கு ஒரு பூசாரி இருக்க வேண்டும். இந்துவோ, முஸ்லிமோ, கிறிஸ்தவனோ அங்கு யார் இருக்க வேண்டும்? ஒரு சிறப்பு உடை யணிந்து பூசாரி ஒருவர் இருக்க வேண்டும்.

கடன் வாங்க வங்கிக்குப் போனால் அங்கு கொடுக்கப்படுகிற படிவங்களை நிரப்புவதற்கு ஒரு ஆள் இருப்பான். ஏனென்றால் அவர்கள் கேட்கிற கேள்விக்குப் பதில் சொல்வதற்குள் தலை கிறுகிறுவென்று சுத்திவிடும். அதனால் ஒருவர் இருப்பார். பத்திரப்பதிவு அலுவலகத்துக்குப் போனால் பத்திரம் எழுது வதற்கு ஒருவன் இருப்பான். அவர்கள் பயன்படுத்துகிற மொழி யாருக்கும் புரியாது. தமிழில் எழுதினாலும் புரியாது. ஆங்கிலத்தில் எழுதினாலும் புரியாது. அதனால் மக்கள் “இந்தாப்பா நூறு ரூபாய் கொடுத்து விடுகிறேன். நீ எனக்கு மனுவை நிரப்பிக்கொடுத்துவிடு,” என்பார்கள். பாமரர்களின் பயன்பாட்டிற்காகத் தான் அவைகளை வடிவமைத்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் அதைப் பயன்படுத்த முடியவில்லை.

“கடவுளிடம் இடைப்படுவது மிகச் சிக்கலான காரியம் இல்லையா? அதனால் கண்டிப்பாக அங்கு ஒரு வல்லுநர் அவசியம். சாதாரண மக்கள் கடவுளிடம் நேரடியாக மனு நிரப்ப முடியாது. அவர்களுடைய தேவைகள் அதிகம். ஆதனால்தான் பூஜை, புனஸ்காரங்கள், வழிபாடுகள்” என்றாகிவிட்டது.

அப்போஸ்தலர் 17ஆம் அதிகாரத்திலே பவுல் அதை சொல்கிறார். “எல்லாருக்கும் ஜீவனையும், சுவாசத் தையும், சகலத்தையும் கொடுக்கிற அவர், தமக்கு யாதொன்று தேவையானதுபோல, மனிதர் கைகளால் பணிவிடை கொள்கிறதும் இல்லை” (அப். 17:25). கடவுளுக்கு மனிதன் எதையுமே கொடுக்க முடியாது. இது வெறுமனே கிறிஸ்தவனுடைய கருத்து மட்டும் அல்ல. உலகத்தில் எந்தப் பாகத்திலும் சிந்திக்கிற எல்லா மனிதர்களும் இந்த முடிவுக்கே வந்திருக்கிறார்கள்.

## தேவனைத் தேடிய புலவர்கள்

நான் அடிக்கடி மேற்கோள் காட்டுகிற ஒரு சித்தருடைய பாடல் உண்டு. தமிழ்நாட்டிலே பல நூற்றாண்டு களுக்கு முன்பு சித்தர்கள் என்று ஒரு கூட்டம் ஆங்காங்கே வாழ்ந்தார்கள். அவர்கள் பொதுவாக மக்க ளுடைய கருத்துகளை கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்வது இல்லை.

கோவிலாவது ஏதடா? குளங்களாவது ஏதடா?
கோவிலும், குளங்களும் கும்பிடும் குலாமரே,
கோவிலும் மனத்துளே, குளங்களும் மனத்துளே,
ஆவதும் அழிவதும் இல்லை, இல்லை, இல்லையே.
கோவில் என்று ஒன்று இல்லை. குளம் என்று ஒன்று இல்லை. கோவிலும், குளமும், உள்ளமதே.

மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்.
மனமது செம்மையானால் வாயுவை உயர்த்த வேண்டாம்.
மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டாம்.
மனமது செவ்வையானால் மந்திரம் செம்மையாமே.

இது வேத வசனம் அல்ல. ஆனால் “ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்; அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர்: நாம் அவருடைய சந்ததியார் (அல்லது நாம் அவருடைய பிள்ளைகளாய் இருக்கிறோம்) என்று சொல்லியிருக்கிறார்கள்” (அப். 17:28) என்று பவுல்

புலவர்களை மேற்கோள் காட்டியிருக்கிறார். நானும் தமிழிலிருந்து சில பாடல்களை மேற்கோள்காட்டு வதற்கு இதுதான் ஆதாரமான வசனம். பவுல் மேற்கோள் காட்டினார். ஆகவே நானும் கொஞ்சம் மேற்கோள் காட்டுவதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும். இது சரி என்று நான் கருதுகிறேன்.

ஏனென்றால், எல்லா நாடுகளிலும், எல்லாக் காலங்களிலும் தேவனைத் தேடின இருதயங்கள் நிச்சய மாகவே உண்டு. அவர்கள் பிரத்தியட்சமாகத் தேவனைக் காணவில்லை. ஆனால், தேவனைப்பற்றிய ஒளிக்கீற்றை அவர்கள் கண்டார்கள். "இவர் கோவில்களில் வாழமாட்டார். குளங்கள் மனிதனுடைய இருத யத்தைச் சுத்தப்படுத்தாது. வாசியை நிறுத்துவது, வாயுவை உயர்த்துவது, சுவாசத்தை நிறுத்துவது, இப் படியெல்லாம் செய்தால் கடவுளை நாம் அறிந்து கொள்ளலாம் என்று நினைப்பதும், சொல்வதும் தவறு" என்று அவர்கள் கண்டிருந்தார்கள். இதுபோன்ற பயிற்சிகளையெல்லாம் செய்தால் கடவுளைக் கண்டு கொள்ளலாம் என்று மக்கள் நினைக்கிறார்கள். கடவுளைக் கண்டுகொள்ள முடியாது.

## எபேசுவில் நற்செய்தி

நீங்கள் நன்றாய்க் கவனிக்க வேண்டும். "நீ கும்பிடுகின்ற இந்தக் கடவுள் பொய், அந்தக் கடவுள் பொய்," என்று பவுல் பேசவே இல்லை. அவர் எபேசுவுக்கு வரும்போது அங்கே அவர் எப்படி நற்செய்தியை அறிவிக்கிறார் என்பதை நன்றாய்க் கவனிக்க வேண்டும். எபேசுவிலே தியானா என்பது அவர்களுடைய நகரதேவதை. The Goddess of the city. டேவிட் பாசனுடைய புத்தகத்தை வாசிக்கும்போது இது நன்றாகப் புரிகிறது. ஒருமுறை ஒரு எரிகல் வந்து விழுந்தபோது அது ஒரு பெண்ணின் உருவம்போல் ஆகிவிட்ட தாம். உடனே அவர்கள் அதைக் கடவுளாக்கிவிட்டார்கள். அதை அவர்கள் எபேசியர்களுடைய தியானா என்று அழைத்தார்கள். அந்தத் தேவதைக்கு அவர்கள் ஒரு கோவில் கட்டினார்கள். அந்தத் தியானாவின் வெள்ளிச் சிலைகளை செய்து விற்கிற ஒரு பெரிய வியாபாரமே எழும்பிவிட்டது. பவுல் அங்கு சுவிசேஷத்தை அறிவித்தபோது நிறையப்பேர் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்கள். அதனால் கோயிலுக்குப் போவோருடைய எண்ணிக்கையும், அந்தச் சிலைகளை வாங்குவோருடைய எண்ணிக்கையும் குறைந்துவிட்டது. ஆகவே, கொல்லர் சமுதாயத்தைச் சேர்ந்த எல்லாரும் சேர்ந்து ஒரு பெரிய கலகத்தை உண்டாக்கினார்கள். அவர்களுடைய நோக்கம் கடவுளைப்பற்றியது அல்ல. "நம்முடைய தொழில் அழிந்துபோகிறது," என்பதுதான் அவர்களுடைய கவலை. "எபேசியருடைய தியானாளே பெரிய வள். எபேசியருடைய தியானாளே பெரியவள்," என்று அவர்கள் இரண்டு மணி நேரம் கோஷம்போட் டார்கள். அங்கு கூடியிருந்த பலருக்குத் தாங்கள் எதற்காகக் கூடியிருக்கிறோம் என்று தெரியவில்லை என்று அங்கு எழுதியிருக்கிறது. எதற்காகக் கூடியிருக்கிறோம் என்று தெரியாமலேயே "எபேசியருடைய தியானாளே பெரியவள், எபேசியருடைய தியானாளே பெரியவள்" என்று கோஷம் போடுகிற அந்த கூட்டத்திற்குப் பெயர் என்ன? "அவனைச் சிலுவையிலறையுங்கள், அவனைச் சிலுவையிலறையுங்கள்," என்று கூட்டம் கத்தும். "எதற்காகச் சிலுவையிலறைய வேண்டும்?" என்று கேட்டால் என்ன பதில் சொல் வார்கள்? "அவன் கத்துகிறான்; அதனால் நானும் கத்த வேண்டும். ஆம், அவரைச் சிலுவையில் அறைந்தே ஆக வேண்டும்," என்று சாதிப்பார்கள். அவர்கள் எபேசியருடைய தியானாளைப்பற்றி ஒன்றுமே சொல்ல வில்லை என்று அந்த நகரத்தின் நியாயாதிபதி சொல்லுகிறார்.

## சாந்தத்தோடும், வணக்கத்தோடும் நற்செய்தியை அறிவித்தல்

எனவே, "மக்கள் பொய்க் கடவுள்களைக் கும்பிடுகிறார்கள்," என்று நாம் ஒருநாளும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், "கடவுள் சிலைகளில் வாழ்வது இல்லை. அது மனிதர்களுடைய கற்பனை," என்று வேண்டுமானால் நாம் சொல்லலாம். நாம் உண்மையைச் சொல்ல வேண்டும். ஆனால், உண்மை யைச் சொல்கிற விதம், நாம் பேதுருவிலே வாசிப்பதுபோல "உங்களிடத்திலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும், வணக்கத்தோடும் மறுவுத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்". "நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே," என்கிற பாணியில் மீசையை முறுக்கிக்கொண்டு சொல்லக்கூடாது. உண்மையைச் சொல்ல வேண்டும். ஆனால், உண்மையை சாந்தத்தோடும், வணக்கத்தோடும் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்ல முடியுமா அல்லது முடியாதா அல்லது உண்மையை கோபத்தோடும், வெறுப்போடும்தான் சொல்ல முடியுமா? உண்மையை சாந்தத் தோடும், வணக்கத்தோடும் சொல்ல முடியும். ஒரு நாளிலே தேவன் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து வைக்கொண்டு மனிதர்கள் எல்லாரையும் நியாயந்தீர்ப்பார்.

## மனித வாழ்க்கையின் நோக்கம்

இது நம்முடைய நற்செய்தியினுடைய ஒரு பகுதி. மனிதனுக்குத் தேவன் வாழ்க்கை என்று ஒன்றைக் கொடுத்திருக்கிறார். இந்த வாழ்க்கையைப்பற்றி அவன் தேவனுக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.

மனித வாழ்க்கை மிக உயர்ந்தது. அது தேவனை வெளிப்படுத்துவதற்கு அவனுக்குக் கொடுக்கப்பட்ட வாழ்க்கை. தன் இஷ்டம்போல் வாழ்ந்து சிதைப்பதற்கு மனிதனுக்கு உரிமை இல்லை.

இன்னொரு பிரபலமான சித்தர் பாடல் உண்டு.

நந்தவனத்தில் ஓர் ஆண்டி-
அவன் நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி,
கொண்டுவந்தான் ஒரு தோண்டி-மெத்தக்
கூத்தாடி கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி என்று பாடினார்.

இதன் பொருள் என்னவென்றால், மனிதன் நாலாறு மாதமாய் (பத்து மாதமாய்) வேண்டி ஒரு மண் தோண்டியைக் கொண்டுவருகிறான். அதாவது மனிதன் மண்ணால் ஆக்கப்பட்டவன். ஆனால், இவனிடம் கொஞ்சம் அறிவு இருந்தால் போதும்...கொஞ்சம் அழகாக இருந்துவிட்டால்... ஒரு நல்ல வேலை கிடைத்து விட்டால்...பத்துப்பேர் நண்பர்களாக இருந்துவிட்டால்... கூத்தாடி, கூத்தாடி மனித வாழ்க்கையைப் போட்டு உடைக்கின்றார்கள்.

**மனித வாழ்க்கை ஒரு புனிதமான பொறுப்பு**

Human life is a sacred responsibility. மனித வாழ்க்கை என்பது தேவன் மனிதனுக்குக் கொடுத்திருக்கின்ற ஒரு புனிதமான பொறுப்பு. இந்த வாழ்க்கையைக்குறித்து அவர் நிச்சயமாக நியாயந்தீர்ப்பார். “இந்த வாழ்க்கையைக்கொண்டு நீ என்ன செய்தாய்?” என்று தேவன் கணக்குக் கேட்பார். நீ தேவனை வெளி யாக்கவும் இந்த வாழ்க்கையைப் பயன்படுத்தியிருக்கலாம்.

நான் சிறுவனாக இருந்தபோது ரோமன் கத்தோலிக்கப் பள்ளியில் சொல்லிக்கொடுத்த ‘மனிதன் மிருக மாகலாம், அவன் மனிதனாகலாம். அந்த மனிதன் இறைவன் ஆகலாம்,” என்ற ஒரு பாடல் ஞாபகம் இருக்கிறது. அதில் அர்த்தம் உண்டு.

இது முதலாவது குறிப்பு: மனிதர்கள் பாவம் செய்தால் அவர்களை நரகத்திற்கு அனுப்புவதற்காக இயேசு கிறிஸ்து வந்தார் என்பதல்ல நம்முடைய நற்செய்தி. ஆனால், நியாயத்தீர்ப்பு உண்டு. அந்த நியாயத்தீர்ப்பு முடிவிலே மனிதர்களை மிகவும் புண்படுத்தும். இது ரொம்ப ஆழ்ந்த சுவிசேஷம் அல்ல.

**மனித வாழ்க்கையின் நோக்கம் தேவனை வெளியாக்குவது**

ஆனால், மனிதனுடைய வாழ்க்கை தேவனை வெளியாக்குவதற்காகச் சிருஷ்டிக்கப்பட்டது. தேவனை வெளியாக்குவதென்றால் என்ன பொருள்? ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தேவனை வெளியாக்கினார். இயேசுகிறிஸ்து எப்படி வாழ்ந்தாரோ அதே அடிச்சுவடுகளில் மனிதன் வாழ வேண்டும் என்பது தேவ னுடைய நோக்கம். இதைப் புரிந்துகொள்வது எளிது; இது கடினம் இல்லை .

**2. தேவன் விரும்புகிற வாழ்க்கை வாழ்வதற்கான வழி**

இப்போது இரண்டாவது குறிப்புக்கு வருகிறேன். ஒருவன் திருக்குறளைப் படித்தால் நல்ல வாழ்க்கை வாழ முடியுமா? முடியும். கன்பூசியஸ் எழுதியதைப் படித்தால் நல்ல வாழ்க்கை வாழ முடியுமா? முடியும். சாக்ரடீஸ், அரிஸ்டாட்டில், பிளேட்டோ இவைகளையெல்லாம் படித்தால் ஒரு நல்ல வாழ்க்கை வாழ முடி யுமா? முடியும். நான் திருக்குறள் படிப்பேன். அது ரொம்ப அருமையானது என்று எல்லாருக்கும் தெரியும். பேருந்தில் எழுதிப் போட்டுவிட்டார்கள்.

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்துவிடல்.

நமக்குத் துன்பம் செய்கிறவரை தண்டிக்கிற மிகச் சிறந்த வழி, அவர்கள் வெட்கப்படும் அளவுக்கு அவர்களுக்கு நன்மை செய்வதே என்பது இதன் பொருள். தரமான குறள். கொஞ்சம் கஷ்டமான குறளைச் சொல்வோம்.

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தன்னை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

ஓ! இதுகூட அவ்வளவு கஷ்டமான திருக்குறள் இல்லை. தன்னையே தோண்டும் மனிதனைக்கூட கீழே விழுந்துவிடாமல் இந்தப் பூமி தாங்குகிறது. அதுபோல நம்மைப் பழிப்பவர்களையும், தூற்றுபவர்களையும், இகழ்கின்றவர்களையும் பொறுத்துக்கொள்வதுதான் தலையாய பண்பாகும். இவைகளெல்லாம் மிக உயர்ந்த அறநெறிகள். இவைகளின்படி ஒரு மனிதன் தன் வாழ்க்கையை அமைத்துக்கொண்டால் அவ னுடைய வாழ்க்கை தேவனை வெளிப்படுத்துகிற வாழ்க்கையாக இருக்குமா? கிட்டத்தட்ட தேவனை

வெளிப்படுத்துகிற வாழ்க்கையாக இருக்கும். உண்மையிலேயே இதை வாழ்ந்துவிட்டால் தேவனை வெளிப்படுத்துகிற வாழ்க்கையாகத்தான் இருக்கும்.

ஆனால், இதில் ஒரு பெரிய சிக்கல் என்னவென்றால்,

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அதைச் செய்கிற தன்மை எனக்கு இல்லையே! பறக்க வேண்டும் என்று எனக்குத் தெரியும். ஆனால், என்னால் பறக்க இயலாது.

**சாது சுந்தர் சிங்**

சாது சுந்தர் சிங் ஒரு சீக்கியர். இளைஞனாக இருந்தபோது பள்ளியில் அவருடைய நண்பர்களுக்குக் கொடுத்த புதிய ஏற்பாடுகளையெல்லாம் சேர்த்துக் குவித்துப் போட்டு தீ வைத்துக் கொளுத்தினவர். அவருடைய தாயார் அவரை மிகவும் பக்திமானாக வளர்த்தார். சீக்கியர்களுடைய குரு கிராந் சாஹிப், முஸ்லிம்களுடைய குரான், இந்துக்களுடைய பகவத்கீதை என்று எல்லாவிதமான பக்தி நூல்களையும் அவருக்குப் புகட்டி அவர்கள் வளர்த்தார்கள். ஆகவே, தங்கள் பிதாக்களுடைய பாரம்பரியத்திற்காக அவர் மிகவும் வைராக்கியமுள்ளவராக இருந்தார். ஆனால், வாலிபனானபோது "உண்மையாகவே தேவன் யார்?" என்று தேடுகிற ஒரு கேள்வி, ஒரு தேடல், அவருடைய இருதயத்தில் இருந்தது. ஒருநாள், "இன்றைக்கு இரவு உண்மையான கடவுள் தன்னை எனக்கு வெளிப்படுத்தாவிட்டால் டிரெயினுக்குமுன் விழுந்து நான் தற்கொலை செய்துவிடுவேன்," என்று அவர் தீர்மானித்தாக அவரைப்பற்றி நான் வாசித்திருக்கிறேன். அந்த இரவிலே இயேசுகிறிஸ்து தனக்குத் தோன்றினார் என்று அவர் சாட்சி எழுதுகிறார். அவர் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார். பொய்யான ஒரு கற்பனையை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனென்றால் அதற்குப்பின் சாது சுந்தர் சிங் வாழ்ந்த வாழ்க்கை மிக அற்புதமான வாழ்க்கை. செருப்பு கூட போடவில்லை. ஒரேவொரு புதிய ஏற்பாடுதான் அவருடைய உடைமை.

"நான் சாமியார்" என்று சொல்கிற ஆட்களையெல்லாம் நான் நம்பவே மாட்டேன். உண்மையான சாமியாருக்கு என்னுடைய இலக்கணம் என்ன தெரியுமா? ஒருவன் நான்கு சுவர்களுள் தூங்கினால் அவன் சாமியார் கிடையாது. அப்படியென்றால் யாருமே சாமியாராக இருக்க முடியாதே. ஆம் யாருமே சாமியாராக இருக்க முடியாது. என்னுடைய மாபெரும் சாமியாராகிய இயேசுகிறிஸ்து, "நரிகளுக்குக் குழிகளும், ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு; மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை," என்று சொன்னார். அப்படியென்றால் அவர் வீட்டிலே தூங்கவே இல்லையா? வீட்டிலே அவர் தூங்கினார். தம்பிமார்கள் அண்ணன்மார்கள் எல்லாம் இருந்தார்கள். அவருக்கு அந்த வீட்டிலே ஒரு இடம் இருந்தது. நம் சாமியார்களோ 10 ஏக்கார், 20 ஏக்கரில் ஒரு பங்களா அல்லது ஒரு ஆசிரமம் கட்டி அங்கு வாழ்வார்கள். அந்த ஆசிரமத்தின் மதில் சுவர் சிறைச்சாலைகளின் சுவரைவிட உயரமாக இருக்கும். அவரைச் சந்திக்க வேண்டுமென்றால், அது முடியவே முடியாது. இவர்கள் சாமியார் கிடையாது.

சாது சுந்தர்சிங் உண்மையாகவே அவருடைய தலைவரும், எஜமானுமாகிய இயேசுகிறிஸ்துவின் அடிச்சுவடுகளில் நடந்தவர். அவர் சந்தித்தது ஒரு பொய்யான கற்பனை என்றால் ஒரு பொய்யான கற்பனைக்காக ஒருவன் அப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்துவிட முடியாது. அவர் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபோது அவருடைய இனத்தைச் சேர்ந்த பல அறிஞர்கள், சான்றோர்கள் அவரிடம் போய், "நம்முடைய மதத்தில் இல்லாத எதை நீ இந்தக் கிறிஸ்தவத்தில் கண்டுபிடித்துவிட்டாய்? ஏதாவது ஒரு தத்துவத்தை, ஒரு கருத்தைச் சொல். 'இது கிறிஸ்தவத்தில் இருக்கிறது. ஆனால் நம்முடைய குரானில் இல்லை, கீதையில் இல்லை' என்று சொல் பார்ப்போம். ஒரேவொரு கருத்தை, ஒரேவொரு தத்துவத்தைச் சொல். அது கிறிஸ்தவத்தில் இருக்கிறது என்றால், அது இங்கும் இருக்கிறது என்று நிரூபிக்க முடியும்," என்று சொன்னார்களாம். சாது சுந்தர் சிங், "எந்தவொரு தத்துவமும், கருத்தும் இங்கு கிறிஸ்தவத்தில் இருக்கிறது என்றால் அது அங்கும் இருக்கிறது என்று உங்களால் நிரூபிக்க முடியும், ஒரேவொரு தத்துவத்தைத்தவிர. இயேசுகிறிஸ்து என்ற நபர்," என்று பதில் சொன்னாராம்.

ஓ! இயேசுகிறிஸ்து! அவர் ஒரு தத்துவம் அல்ல, அவர் ஒரு நபர். தேவனுடைய மக்களாகிய நம்முடைய ஒரேவொரு தத்துவம். இயேசு கிறிஸ்து மதத்திற்குக் கொடுக்கப்பட்ட தத்துவம் அல்ல. அது ஒரு நபர். "ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இங்கும் இருக்கிறார். இயேசுகிறிஸ்து அங்கும் இருக்கிறார் என்று உங்களால் நிரூபிக்க முடியாது. எல்லாத் தத்துவங்களும், இங்கும் இருக்கின்றன, அங்கும் இருக்கிறது என்று நீங்கள் நிரூபிக்கக் கூடும். ஆனால் இயேசுகிறிஸ்து இங்கும் இருக்கிறார். அவர் அதிலும் இருக்கிறார். இதிலும் இருக்கிறார் என்று உங்களால் நிரூபிக்க முடியாது," என்று அவர் பதில் சொன்னாராம்.

## ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே நற்செய்தி

கிறிஸ்தவம் அல்லது நற்செய்தி என்பது ஒரு தத்துவத்தைப்பற்றியது அல்ல. கிறிஸ்தவம் அல்லது நற்செய்தி என்பது ஒரு நபரைப்பற்றியது. அந்த நபர் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து. நல்ல வாழ்க்கை வாழ்வதைப்பற்றி திருவள்ளுவர் எழுதியிருக்கிறார், கன்பூசியஸ் எழுதியிருக்கிறார், புத்தரும் எழுதியிருக்கிறார்.

புதிய ஏற்பாட்டிலே ஒரேவொரு பகுதியை வாசிக்க வேண்டுமென்றால் ரோமர் 7ஆம் அதிகாரத்தை நீங்கள் பொறுமையாய் வாசியுங்கள். "நன்மை செய்ய வேண்டும் என்கிற விருப்பம் என்னிடத்தில் உண்டு. ஆனால், நன்மை செய்வதற்குரிய திராணி, வல்லமை, என்னிடத்தில் இல்லை," என்பது ரோமர் 7ஆம் அதிகாரத்தினுடைய கருப்பொருள். "நன்மை செய்ய வேண்டும் என்கிற விருப்பம் என்னிடத்தில் உண்டு. ஆனால் நன்மை செய்கிற திறமை என்னிடத்தில் இல்லை. நன்மை செய்ய வேண்டும் என்கிற விருப்பம் என்னிடத்தில் இருக்கிறது. நன்மை செய்வதோ என்னிடத்தில் இல்லை". கடைசியாக, பவுல் அதன் முடிவைச் சொல்கிறார். ஆகவே, "நிர்ப்பந்தமான மனிதன் நான். இந்த மரண சரீரத்திலிருந்து யார் என்னை விடுவிப்பார்?"

அந்த மனிதனுடைய போராட்டம் என்ன?

'இன்னா செய்தாரை வொறுத்தல் அவர் நாண<br>நன்னயம் செய்துவிடல்' என்று எனக்குத் தெரியும்.<br>'அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல தம்மை<br>இகழ்வாரைப் பொறுத்தல் தலை' என்று எனக்குத் தெரியும்.

ஆனால், அதைச் செய்வதோ என்னிடத்தில் இல்லை. முழு வேதாகமத்திலும் பத்துக் கட்டளைகளையும், நியாயப்பிரமாணமங்களையும், புதிய ஏற்பாட்டிலே ஆண்டவராகிய இயேசுவினுடைய மலைப்பிரசங்கத்தையும் (மத்தேயு 5, 6, 7ஆம் அதிகாரங்கள்) வாசித்துவிட்டு "நான் கிறிஸ்தவனாக இருக்க முடியும்" என்கிற தைரியம் நமக்கு வருமா? "விபச்சாரம் செய்யாதிருப்பாயாக" என்று பத்துக்கட்டளைகளில் வாசித்திருக்கிறோம். மலைப்பிரசங்கத்திலே "ஒரு பெண்ணை இச்சையோடு பார்க்கிற எவனும் அவளோடு விபச்சாரம் செய்தாயிற்று" என்று வாசிக்கிறோம். இதை வாசித்தபிறகு எவனாவது தைரியமாக "நான் கிறிஸ்தவனாகப் போகிறேன்," என்று சொல்வானோ? இந்தப் பூமியியல் மத்தேயு 5, 6, 7இன்படி வாழ்ந்தவன் ஒருவனும் இல்லை.

ஒரு நாய்குட்டியிடம் போய், "நீ பறக்க வேண்டுமென்றால், முதல் கட்டளை நீ உன்னுடைய சிறகுகளைத் தூக்க வேண்டும்; இரண்டாம் கட்டளை, நீ சிறகுகளை மேலும் கீழும் அசைக்க வேண்டும்; மூன்றாம் கட்டளை, நீ வேகமாக அசைக்க வேண்டும்; நான்காம் கட்டளை, காற்றைத் தள்ள வேண்டும்; ஐந்தாம் கட்டளை நீ பறக்க வேண்டும்," என்று என்னதான் கட்டளைகள் கொடுத்தாலும் நாய்க்குட்டியால் பறக்க முடியுமா? பறக்க முடியாது. மனிதனுக்குப் பத்துக் கட்டளைகளையும், நியாயப்பிரமாணத்தையும், மலைப்பிரசங்கங்களையும் கொடுப்பது ஒரு நாய்குட்டியைப் பறக்கச் சொல்வதுபோல இருக்கும்.

மனிதனிடம் போய்

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண<br>நன்னயம் செய்து விடல் என்பது நாய்குட்டியிடம் போய் "நீ பறக்க வேண்டும்," என்று சொல்வதுபோலாகும். அது சாத்தியமில்லை. "உன் சிறகுகளை நீ இப்படி மேலும் கீழும் உயர்த்த வேண்டும், தாழ்த்த வேண்டும், வேகமாக மேலும் கீழும் அசைக்க வேண்டும்," என்று பறக்கக் கற்றுக்கொடுக்கலாம். யாருக்குக் கற்றுக்கொடுக்கலாம். ஒரு தாய்ப்பறவை குட்டிப்பறவைக்குக் கற்றுக்கொடுத்தால் இந்தக் கட்டளைகள் வேலைசெய்யும்.

ஒரு குரங்குக்கு நம்மைப்போல ஆடை போடலாம், தொப்பி போடலாம், கறுப்புக் கண்ணாடி போடலாம், செருப்புப் போடலாம். அச்சு அசலாக அதை ஒரு மனிதனைப்போல் ஆக்கிவிடலாம். உடனே நாம் "மனிதனுக்கும், குரங்குக்கும் நிறைய ஒன்றும் வேறுபாடு இல்லை. இது நிரூபிக்கப்பட்டது," என்ற முடிவுக்கு வந்துவிடலாமா? ஒரு மனிதனால் விமானத்தை ஓட்ட முடியும். விமானம் ஓட்டுவது எப்படி என்கிற ஒரு கையேடு இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். இதை ஒரு குரங்கிடம் கொடுத்து அல்லது அதிலுள்ள கட்டளைகளையெல்லாம் குரங்குக்குச் சொல்லிக்கொடுத்து விமானத்தை ஓட்ட வேண்டுமென்றால் இந்தக் குரங்கால் விமானத்தை ஓட்ட முடியுமா? ஓட்ட முடியாது. காரணம் என்ன? இந்தக் கையேடு ஒரு குரங்குக்கு எழுதப்பட்டதல்ல. இது மனிதனுக்கு எழுதப்பட்டது. அதுவும் எல்லா மனிதர்களுக்கும் அல்ல. கல்வி அறிவு அடைய வேண்டும்.

முழு வேதாகமத்தையும் அல்லது இப்படிப்பட்ட எல்லா அறநெறிகளையும் ஒரு மனிதனுக்குக் கொடுத் தாலும், அந்த மனிதனால் அவைகளைப் பின்பற்ற முடியாது. ஏனென்றால் மனிதனுடைய தன்மை, மனித னுடைய உயிர், வாழ்வு, மனித ஜீவன் பாவத்தன்மை உடையது. பற என்றவுடன் ஒரு பறவையால் பறக்க முடியும். ஆனால், ஒரு நாய்க்குட்டி கொஞ்சம் முயற்சி செய்து ஓடிப்போய் இரண்டு அடி தாவினால் அது அப்படியே பறந்து மேலே போய் விடுமா?

ஒருவேளை கொஞ்சம் பயிற்சிக்குப்பின் ஒரு அடி, இரண்டு அடி, மூன்று அடி என்று நாம் பறக்கலாம். அதுவும் குடும்பத்தை பொறுத்தது; வளர்ப்பைப் பொறுத்தது. கொஞ்சம் நல்ல குடும்பமாக இருந்தால் பக்தி மார்க்கத்தில் வளர்த்து “இந்தத் தவறு பண்ணாதே; அந்தத் தவறு பண்ணாதே” என்று சொல்லி வளர்ப்பார்கள்.

நான் ஒரு ரோமன் கத்தோலிக்கனாய்ப் பிறந்து வளர்க்கப்பட்டவன். நான் இயேசுகிறிஸ்துவை கண்டடைந்த தற்கு மிகப் பெரிய காரணம் என்னுடைய ஞானஉபதேச வகுப்பு ஆசியராகிய சிரில் டீச்சர் “கெட்ட வார்த்தை சொன்னால் வாயிலே ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவார்கள்,” என்று அவர் சொல்வார். உண்மை யாக அது பொய். ஆனால், அவர் சொன்னதை என்னால் மறக்கவே முடியாது. அவர் சொன்னது பசுமரத் தாணிபோல் என்னுடைய நெஞ்சத்தில் பதிந்துவிட்டது. எங்கள் ஊர் அப்படிப்பட்ட ஊர். வீட்டை விட்டு காலை எடுத்து வெளியே வைத்தாலே “அப்படிப்பட்ட” வார்த்தைதான் கேட்கும். என் ஊரைப் பொறுத்த வரையிலே கெட்ட வார்த்தை என்று ஒன்று கிடையவே கிடையாது. நாங்கள் யாரும் “ஐயோ!” என்று காதை மூடுகிற வழக்கமே கிடையாது. அப்போது அந்த ஆசிரியர் சொன்னது என்னுடைய மனதிலே பதிந்து போயிற்று.

நான் வாலிபனானபோது தேவனை விசுவாசிக்கவில்லை. “கடவுள் இல்லை” என்கிற ஓர் எண்ணத்திற்கு வந்தேன். ஆனால், சில சமயங்களிலே “கடவுள் இல்லைதான். ஆனால் ஒருவேளை இருந்துவிட்டால்! சிரில் டீச்சர் சொன்னது உண்மையாகிவிடுமே” என்ற எண்ணமும் வரும். வாயிலே ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவார்கள் என்று மட்டுமல்ல, இன்னும் பலவேறு காரியங்களை அவர் சொல்லியிருந்தார். “நரகம் எப்படி இருக்கும்! பரலோகம் எப்படி இருக்கும்! நல்லவனாக எப்படி இருக்க வேண்டும் என்பதைப்பற்றி யெல்லாம் அவர் சொல்லியிருந்தார்.

### சட்டதிட்டங்கள் கிறிஸ்துக்கு நடத்துகின்றன

எனவே. இருதயத்தின் ஒரு மூலையிலே இது ஒரு முள்போலத் தைத்துக்கொண்டே இருக்கிறது. காட்டாறு போல அல்லது அவிழ்த்துவிடப்பட்ட ஒரு கழுதையைப்போல, குதிரையைப்போல தறிகெட்டு ஓடாமல் இருப்பதற்கு அது நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் நடத்துகின்ற உபாத்தியாய் இருக்கின்றது என்று கலாத் தியர் 4ஆம் அதிகாரத்திலே அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார். நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் நடத்துகின்ற உபாத்தியாய் இருக்கின்றது. திருக்குறள் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் நடத்துகின்ற உபாத்தியாய் இருக்கின்றது.

இப்படி வாழ வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். ஆனால், என்னால இப்படி வாழ முடியவில்லை. இதற்குத் தீர்வு எங்கே இருக்கிறது? தேவன் தம்முடைய ஜீவனையே மனிதனுக்குக் கொடுக்கத் திட்டமிட் டுள்ளார். “ஒரு பறவையைப்போல் நீ வாழ்,” என்று சொன்னால் “திருவள்ளுவரும் அதைத்தான் சொன் னார்,” என்று சொல்லலாம். ஆனால், இயேசுகிறிஸ்து “பறவையைப்போல் வாழ்,” என்று மட்டும் சொல்ல வில்லை; அவர் ஒரு பறவையின் உயிரையே நமக்குத் தந்தார். பறவையின் ஜீவனை நமக்குள் தந்தார். அல்லேலூயா! ஏனென்றால், அது உண்மையிலேயே மிகவும் அற்புதமான காரியம். “பறவையைப்போல் வாழ்” என்பது நற்செய்தி அல்ல. ஒரு பறவையின் ஜீவனை எனக்குள் வைப்பதுதான் நற்செய்தி. பறவை யின் ஜீவனை எனக்குள் வைத்து, அதன்பிறகு நான் எப்படிப் பறக்க வேண்டும் என்று கற்றுக்கொடுத்தால் அது மிகவும் பயனுள்ளது. பழைய ஏற்பாடு “பறவையைப்போல் வாழ்,” என்று போதிக்கிறது. புதிய ஏற்பாடு பறவையின் ஜீவனை நமக்கு வழங்குகிறது. ஞானஉபதேச வகுப்பு, நற்கருணை வீரன் போன்றவை “பறவையைப்போல் வாழ்” என்று எனக்குப் போதித்தன. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நற்செய்தி என்னவென்றால் அவர் பறவையின் ஜீவனை எனக்குக் கொடுத்தார். திருக்குறள், கன்பூசியஸ், சாக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில், புத்தர் போன்றவர்கள் “பறவையைப்போல் வாழ்” என்கிறார்கள்.

ஆசையே அழிவுக்குக் காரணம் என்று புத்தர் சொன்னார். ஆசையே இல்லாத மனிதன் யார்? அப்போஸ் தலனாகிய பவுல், பத்துக் கட்டளைகளை வாசித்துவிட்டு என்ன சொல்லுகிறார் தெரியுமா? “இதைச் செய்யக் கூடாது, இதைச் செய்ய வேண்டும்” என்ற முதல் ஒன்பது கட்டளைகளை நாம் பின்பற்றிவிடலாம். ஆனால், பத்தாவது கட்டளை, “இதைச் செய் அல்லது இதைச் செய்யாதே” என்பதைப்பற்றியது அல்ல. பத்தாவது கட்டளை, “பிறனுடைய பொருள்மேல் ஆசைப்படக் கூடாது” என்று சொல்லுகிறது. பணமாக

இருந்தாலும் சரி, ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி. முறையற்ற அல்லது கட்டுப் பாடற்ற ஆசைதான் இச்சை. சாப்பிட வேண்டும் என்ற ஆசை எல்லாருக்கும் உண்டு. சாப்பிடுகிறோம். பசி அடங்கிவிட்டது. ஆனாலும், தொடர்ந்து சாப்பிட வேண்டும் என்பது இச்சை. ரோமர் 7ஆம் அதிகாரத்திலே பவுல் என்ன சொல்லுகிறார் தெரியுமா? "எல்லாக் கட்டளைகளுக்கும் நான் கீழ்ப்படிந்துவிட்டேன். ஆனால், "இச்சியாதிருப்பாயாக" என்கிற ஒரு கட்டளை நான் எப்படிப்பட்ட ஆள் என்று காட்டிவிடுகிறது. இந்தக் கட்டளை என்னைப் பிடித்துவிட்டது. It found me out என்று ஆங்கிலத்தில் சொல்லலாம். 9 கட்டளைகள் நான் எப்படிப்பட்ட ஆள் என்று இனம் காட்டவில்லை. பத்தாவது கட்டளையாகிய do not covet இச்சியா திருப்பாயாக என்கிற ஒரு கட்டளை நான் எப்படிப்பட்ட மனிதன் என்பதை இனம் காட்டிவிட்டது," என்று சொல்லுகிறார்.

## புதிய ஏற்பாட்டு நற்செய்தி-தேவனுடைய ஜீவன்

ஆகவே. அன்பானவர்களே, புதிய ஏற்பாட்டு நற்செய்தி என்னவென்றால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இந்தப் பூமியிலே மனிதனாக வந்து சிலுவையிலறையுண்டு, உயிர்த்தெழுந்து ஒரு மாபெரும் காரியத்தைச் செய்தார். அவருடைய இரத்தத்தால் நம்முடைய பாவங்களை மன்னித்தார். கூடுதலாக அவர் தேவனுடைய ஜீவனையே நமக்குள் வழங்குகிறார். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து "திருடன் திருடவும், கொல்லவும், அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ என் ஆடுகளுக்கு ஜீவன் உண்டாயிருக் கவும் அது பரிபூரணப்படவும் வந்தேன்" (யோவான் 10:10) என்று சொன்னார். "இயேசு ஜீவனுள்ள தேவ னுடைய குமாரன் என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கிறது" (யோவான் 20:31) என்று யோவான் கூறுகிறார். இருபது அதிகாரங்களை எழுதினபிறகு யோவான் அதற்கு முடிவுரை சொல்கிறார். "இந்த இயேசுவைப்பற்றி நான் இவ்வளவு எழுதியிருப்பதற்குக் காரணம் என்ன? இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று அவர் முடிவுரை கூறுகிறார். அதன் பொருள் என்னவென்றால் Jesus Christ is God manifested in the flesh. தேவன் மனிதர்களுக்குப் புலப்படும் வண்ணம் ஊனுருவில் வெளிப்பட்டார் என்றால் அது ஒரேவொரு நபர்தான். அவர் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு வெளியே தேவன் வெளிப்பட்டதில்லை. வெளிப்படப்போவதும் இல்லை. இயேசு இப் படிப்பட்ட ஒரு நபர் என்று வெளிப்பட்டதின்மூலமாக நாம் ஜீவனைப் பெற்றுக்கொள்கிறோம். ஜீவன்! தேவனுடைய ஜீவன்! நித்திய ஜீவன்! தேவனுடைய இந்த ஜீவனிலே, அவர் விரும்புகின்ற வாழ்க்கை வாழ்வதற்குரிய திறன், திராணி இருக்கிறது. Capacity to live the life that He has ordained for man. இதுதான் நாம் பிரசங்கிக்கிற நற்செய்தி.

இரண்டு காரியங்கள் சொன்னேன். ஒன்று, மனித வாழ்க்கைக்காகத் தேவனுடைய குறிக்கோள் என்ன? மனிதன் தேவனை வெளியாக்குகிற ஒரு வாழ்க்கை வாழ வேண்டும். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மட்டுமே தேவனை வெளியாக்குகிற ஒரு வாழ்க்கை வாழ்ந்தார். பிறகு தான் வாழ்ந்ததுபோல நாமும் வாழ வேண்டும் என்று அவர் கோரினார். இரண்டாவது, தான் வாழ்ந்ததுபோல நாம் வாழ வேண்டும் என்று கோரிவிட்டு அவர் போயிருப்பார் என்றால் அது நற்செய்தி அல்ல. அது சுமையான செய்தி. It is not a Good News. It is a burden. How can I live the way He lived? இரண்டாவது குறிப்பு, நற்செய்தி என்னவென்றால் தான் வாழ்ந்ததுபோல் நாம் வாழ வேண்டும் என்று அவர் சொன்னது மட்டுமல்ல. அப்படி வாழ்வதற்குத் திராணியுள்ள, capacity உள்ள தேவனுடைய ஜீவனையே அவர் நமக்கு வழங்கினார். இந்த நற்செய்தியைப்போல, இந்த மகிழ்ச்சியான செய்தியைப்போல, இந்த மங்களகரமான செய்தியைப்போல வானத்தின்கீழே, பூமிக்குமேலே ஒரு செய்தியும் இல்லை.

நீங்கள் இயேசுகிறிஸ்துவை இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லையென்றால்...ஏற்றுக்கொள்வது என்றால் அவர் ஊனுருவில், மனித உருவில் வந்த தேவன் என்று விசுவாசிப்பதாகும். அப்படி அவரை விசுவாசிக் கும்போது நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. அவர் தேவனுடைய ஜீவனைத் தருகிறார். தேவ னுடைய அந்த ஜீவன் அவர் வாழ்ந்த வண்ணம் இந்தப் பூமியிலே வாழ்வதற்கு வேண்டிய திராணியை, திறமையை, வலிமையை, பலத்தைத் தருகின்றது. என்னுடைய ஒரு விருப்பம் என்னவென்றால் தேவ னுடைய மக்கள் இந்த உலகத்துக்கு நற்செய்தியை அறிவிக்கும்போது இதை, இப்படி அறிவித்தால் எவ் வளவு நலமாக இருக்கும்! நாம் நம்மோடு தொடர்புடைய மக்களுக்கு நற்செய்தி அறிவிக்கும்போது அல்லது இயேசுகிறிஸ்துவை அறிமுகப்படுத்தும்போது, அறிமுகப்படுத்துகிற விதம் இதுவாக இருக்க வேண்டும். தேவன் உங்கள் வாழ்க்கையை ஆசீர்வதிப்பாராக, வளப்படுத்துவாராக. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில் வாழ்ந்ததுபோல் வாழ்வதற்கு அவர் செய்த வாக்குறுதிகளை உங்கள் வாழ்க்கை யிலே நிறைவேற்றுவாராக. ஆமென்.